# குழந்தைகள் தின விழா

குழந்தைகள் தின விழா
பனித் துகள்களின் மார்கழி விழா!
சுட்டிக் குழந்தைகளின்
குட்டி இதயக் கோட்டையில்
கோமானாக வாழ்பவரே!
மழலை மொழிகளில்
மகிழ்ச்சி வெள்ளத்தை
தன்னுள் கண்ட மாமனிதரே!
மழலையின் சிரிப்பு
மனதை திறக்கும் சாவி!
மழலையின் மகிழ்ச்சி எனும்
மாமலையில் தோன்றும்
நீர்வீழ்ச்சி நீரே!
நீர்வீழ்ச்சியின் ஊற்றுக்கண்ணே!
நீங்காத புகழ் கொண்டவரே!
இந்தியக் குழந்தைகள் போல்
ஜப்பான் குழந்தைகள் மேலும்
அளவற்ற அன்பு கொண்டு
யானைக்குட்டியை பரிசாக அளித்தவரே!
அன்பின் வழித்தடத்தில்
குழல் இனிது யாழ் இனிது
மழலையின் மொழி அதனினும் இனிது
மற்றெல்லாம் சென்றன அதன்பின்னே!
நவீன இந்தியாவின் சிற்பியே!
ஐந்தாண்டுத் திட்டங்களின் நாயகனே!
ரோஜாவை தாலாட்டும் தென்றலான
மழலையின் மனதை
அன்பெனும் ஆயுதத்தால்
வெற்றி கண்டவரே!
நின் புகழ் வாழ்க

~ **S.சாந்தி , M.A., B.Ed.,**
சாய்ராம் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி ,
திருவாரூர்.